RESOURCES FOR MTLs

# கைவினைப் பொருள்கள் செய்வதன்வழிச் சொல்வளத்தைப் பெருக்குதல்

**கண்ணோட்டம்:**

கைவினைப் பொருள்கள் செய்வதன்வழிப் பிள்ளைகளின் சொல்வளத்தைப் பெருக்கலாம். கருப்பொருள் தொடர்புடைய ஓவியங்களை வரைதல், கைவினைப் பொருள்களைச் செய்தல் முதலிய நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்தலாம். தாங்கள் வரைந்த ஓவியத்தைப்பற்றியோ செய்த கைவினைப் பொருளைப்பற்றியோ பிள்ளைகளைப் பேச ஊக்குவிக்கலாம். பிள்ளைகள் விரும்பும் நடவடிக்கைகளின்மூலம் மொழியைக் கற்பித்தல் அவர்களுக்கு இனிய அனுபவமாக அமையும். அவர்கள் இந்த நடவடிக்கைகளை மீண்டும் மீண்டும் செய்ய விரும்புவார்கள்.

**கற்றல் குறிக்கோள் 1: தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்**

1. **தாய்மொழி நடவடிக்கைகளை விரும்புதல்**
   - ✓ எண்ணங்களையும் தகவல்களையும் தாய்மொழியில் வெளிப்படுத்த அடையாளம் அல்லது குறியீடுகள் வரைதல், உருவாக்குதல்
   - ✓ சொற்கள், சொற்றொடர்கள் அல்லது வாக்கியங்கள் அமைத்தல்

**ஓவியம் வரைதல்; கைவினைப் பொருள்கள் செய்தல்**

பிள்ளைகள் ஓவியம் வரைவதிலும் கைவினைப் பொருள்கள் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் காட்டுவார்கள். கைவினைப் பொருள்கள் செய்வதன்வழிப் பிள்ளைகளின் சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள் வலுவடைகின்றன என்கிறார்கள் ஐசன்பர்க், பேஃஸ், ஸ்பின்ராட் (2006). மேலும், கைவினைப் பொருள்கள் செய்தல் பிள்ளைகளின் சொல்வளப் பெருக்கத்திற்கு வழிவகுக்கிறது. இதனால், இளம் பிள்ளைகளுக்குக் கைவினைப் பொருள்களைச் செய்யக் கற்றுக்கொடுப்பது சொல்வளப் பெருக்கத்திற்கு உகந்த நடவடிக்கையாகும். இம்முறையைப் பயன்படுத்தும்போது பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்:

### முன் தயாரிப்பு தேவை

- பிள்ளைகளுக்குப் பாட நடவடிக்கையின் படிநிலைகள் (ஓவியம் வரைதல் கைவினைப் பொருள்கள் செய்தல்) ஏற்புடையதா என்பதைப் பாடம் தொடங்குவதற்கு முன்னரே முடிவு செய்ய வேண்டும். (எ.டு: பிள்ளைகளால் கத்தரிக்கோலைப் பயன்படுத்த இயலுமா?)

- பிள்ளைகள் ஓவியம் வரையவும் கைவினைப் பொருள்கள் செய்யவும் தேவையான பொருள்களைத் தயார் செய்ய வேண்டும். (எ.டு: தாள்கள், கத்தரிக்கோல், பசை)




**பிள்ளைகளுக்குப் பசை, கத்தரிக்கோல் போன்றவற்றைப் பயன்படுத்தப் கற்றுக்கொடுத்தல்**




**பிள்ளைகள் தங்களுக்கு விருப்பமான வண்ணங்களைத் தேர்ந்தெடுக்க அனுமதித்தல்**

## பிள்ளைகளுக்குத் தொடர் ஆதரவு அளித்தல்

- பிள்ளைகள் ஓவியம் வரையச் சிரமப்பட்டால் வரைவதற்கானப் படிவங்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

- பிள்ளைகள் ஒவ்வொரு நிலையிலும் பார்த்துச் செய்வதற்குத் தேவையான மாதிரிகளைச் செய்து காட்ட வேண்டும்.

- பிள்ளைகளுக்குப் படிநிலைகளை விளக்கும்போது எளிமையான சொற்களைப் பயன்படுத்த வேண்டும். (எ.டு: ‘தாளை மடி’, ‘தாளை வெட்டு’)

- பிள்ளைகளுக்கு ஓவியம் வரையவும் கைவினைப் பொருள்கள் செய்யவும் பலதரப்பட்ட பொருள்களை வழங்க வேண்டும். (எ.டு: நூல், களிமண், வண்ணத்தாள், வண்ணமணிகள், பொத்தான்கள், இலைகள், இன்னும் பல...)

 

பிள்ளைகள் கைவினைப் பொருள் செய்ய களிமண்ணையும் வண்ணத்தாள்களையும் கொடுத்தல்

## விதிமுறை

- பிள்ளைகள் இந்த நடவடிக்கைகளைச் செய்யும்போதே, அவர்கள் அமர்ந்திருக்கும் இடத்தையும் வகுப்பையும் சுத்தமாக வைத்துக்கொள்ளச் சொல்ல வேண்டும்.

 

நடவடிக்கையைச் செய்த பின்னர், பிள்ளைகள் வகுப்பைச் சுத்தம் செய்தல்

## சொல்வளப் பெருக்கம்

- பிள்ளைகள் கைவினைப் பொருளைச் செய்யும் முன்னரும் செய்யும்போதும் செய்த பின்னரும் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திப் பேச ஊக்குவிக்க வேண்டும்.

- பிள்ளைகள் வரைந்த ஓவியத்தையும், செய்த கைவினைப் பொருளையும் கொண்டு பேசுதல், பாடுதல், நடித்தல், கதை சொல்லுதல் முதலிய நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும்.





பிள்ளைகள் கைவினைப் பொருள் செய்தபின் அதைப்பற்றி ஆசிரியருடன்

இந்த நடவடிக்கை பிள்ளைகளின் கற்பனைத் திறனை மேம்படுத்துகிறது. மேலும், பிள்ளைகள் எதார்த்தமான சூழலில் மொழியைப் பயன்படுத்த அறிந்துகொள்வார்கள்.



****************************